

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 270 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 28 – வியாழக்கிழமை 11 மே 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 270 : Thiruvalluvar Year - 2054 - Chithirai 28 - Thursday 11 May 2023 - Madurai 8 Pages ₹ 5.00


## மக்களின் மிக முக்கியத் தேவையான - அன்றாடப் பயன்பாட்டில் உள்ள

# சாலைப் பணிகளை மிக விரைந்து முடித்திடுக!

### தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சாலை மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, மே 11 -**

**தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், சாலைகள் மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று காலை நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "மக்களின் மிக முக்கியத் தேவையான அன்றாடப் பயன்பாட்டில் உள்ள சாலைப் பணிகளை மிக விரைந்து முடித்திடுமாறு" அறிவுறுத்தினார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.5.2023) தலைமைச் செயலகத்தில், சாலைகள் மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (10.5.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் சாலை மற்றும் பாலப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் நகராட்சி நிருவாகத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மற்றும் பாலப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது: -

மக்களின் அன்றாடப் பயன்பாட்டில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த பணி ஆய்வினை இன்றைக்கு நாம் மேற்கொண்டோம்.

**சாலைகளின் தரம் சிறப்பாக இருக்க வேண்டும்!**

பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் காரணத்தால், சாலைகளில் கார்கள் மற்றும் கனரக வாகனங்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. அதேபோல், இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கையும் பன்மடங்கு உயர்ந்து வருகிறது. இன்றைய சூழ்நிலையில், சாலைகளின் தரம் சிறப்பாக இருக்க வேண்டுமென்று மக்களிடம் எதிர்பார்ப்பு இருப்பது நியாயமானதே.

பல்வேறு துறைகள் அரசளவில் இருந்தாலும், இந்த ஒரு பொருளுக்கென்று சாலைகள் மற்றும் பாலங்களின் பணி முன்னேற்றத்தை மட்டும் நான் தனிப் பொருளாகக் கொண்டு ஆய்வு மேற்கொண்டதன் மூலம், அதன் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

2021-2022 மற்றும் 2022 -2023 ஆம் ஆண்டுகளில், ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைகள் துறை மற்றும் நகராட்சி நிருவாகத் துறை ஆகிய துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து புள்ளிவிவரங்களோடு இன்றைக்கு நாம் ஆய்வு செய்திருக்கிறோம்.

**நிர்வாக ரீதியான தாமதங்கள் தவிர்த்தல்!**

துறைகளுக்குள் இருக்கிற பிரச்சினைகள், குறிப்பாக, சுற்றுச்சூழல், நிலஎடுப்புப் பிரிவுகளில் போதுமான எண்ணிக்கையில் மாவட்ட வருவாய் அலுவலர்களை நியமித்தல், நிருவாக ரீதியிலான தாமதங்களைத் தவிர்த்தல் போன்றவற்றில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தரமான சாலைகள் மக்களிடம் நிச்சயம் நல்ல பெயரைப் பெற்றுத் தரும். தற்போது நான் சென்னையில் பல இடங்களில் சாலைகளில் மெட்ரோ இரயில் பணிகள் தவிர்த்து, பல்வேறு இதர காரணங்களுக்காக சாலைகள் தோண்டப்பட்டுள்ளதைக் காண்கிறேன். இது சாலை உபயோகிப்பவர்களுக்கு மிகுந்த சிரமத்தை அளித்து வருவதோடு, அவ்வப்போது விபத்துகளும் ஏற்படுகின்றன.

**தோண்டப்படும் சாலைகளை விரைவில் சரிசெய்யவேண்டும்!**

எனவே, தோண்டப்படும் சாலைகள் விரைந்து சரிசெய்யப்பட வேண்டும்; இதனை பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மட்டுமல்ல; அனைத்துப் பகுதிகளிலும் கண்காணிக்கப்பட வேண்டும். சென்னை புறநகர்ப் பகுதிகளில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டப் பணிகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்திட வேண்டும்.

பணி முன்னேற்றத்தில் ஏதேனும் பிரச்சினை என்றால், அது உடனடியாக தலைமைச் செயலாளர் அல்லது துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, தீர்க்கப்பட வேண்டும். அனைத்து முக்கிய பணிகளின் முன்னேற்றத்தையும் டேஷ்போர்டில் அப்டேட் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். அத்துடன், பணி முன்னேற்ற அறிக்கையினையும் எனக்கு அனுப்பி வைக்க தொடர்புடைய துறைச் செயலாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இன்று ஆய்வு செய்த பணிகளுக்கெல்லாம் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றை விடுவிப்பதில் தாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 2021-2022 ஆம் ஆண்டுப் பணிகள், கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஆகிய அனைத்தையும் தீவிரமாகக் கண்காணித்து, மிக விரைந்து பணிகளை முடித்திட வேண்டும்.

எனவே, இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் நீங்கள் அளித்துள்ள வாக்குறுதிகளுக்கு ஏற்ப, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே பணிகளை முடியுங்கள். பிரச்சினைகள் இருந்தால், மீண்டும் சொல்கிறேன், அமைச்சர்களின் கவனத்திற்கும், என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வாருங்கள்.

மக்களின் மிக முக்கியத் தேவையான சாலைப் பணிகளை நிறைவேற்றுவதில், மூத்த அலுவலர்களாகிய நீங்கள் அடுத்த ஆய்வுக் கூட்டத்தின் போது, சிறந்த அளவிற்கு முன்னேற்றம் காட்டிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது!

## தமிழ்நாட்டில் ஹூண்டாய் நிறுவனம் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இன்று ஒப்பந்தம்!

*சென்னை, மே 11 -*

*தமிழ்நாட்டில், ஹுண்டாய் நிறுவனம் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இன்று கையெழுத்தாகிறது.*

*தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில், சென்னை அருகே ஆயிரத்து 891 கோடி ரூபாயில் ஜப்பான் நாட்டின் மிட்சுபிஷி நிறுவனம் ஏ.சி. தொழிற்சாலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.*

*மேலும், 2024ஆம் ஆண்டு ஜனவரியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளதாகவும், இதற்காக வரும் 23ம் தேதி ஜப்பான் மற்றும் சிங்கப்பூருக்கு செல்ல உள்ளதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தென்கொரிய கார் தயாரிப்பு நிறுவனமான ஹுண்டாய், தமிழ்நாட்டில 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.*

*இந்த முதலீடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், இன்று கையெழுத்தாக இருக்கிறது. அடுத்த 7 ஆண்டுகளில் மின்சார வாகனங்கள் தயாரிக்கவும், அதற்கான கட்டமைப்பை உருவாக்கவும் ஹுண்டாய் நிறுவனம் இந்த முதலீட்டை பயன்படுத்த உள்ளது.*

---

12 சந்தேகத்துக்குரிய பரிவர்த்தனைகள்!

## அதானி குழும முறைகேடுகள் - விசாரணைக் குழு அறிக்கை!

### சீலிடப்பட்ட உறையில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல்!



*புதுடெல்லி, மே. 11-*

*அதானி குழுமம் நிதி முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக அறிக்கை வெளியிட்ட அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை குறித்து விசாரிக்க 5 பேர் கொண்ட நிபுணர் குழுவை உச்சநீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் அமைத்தது. எஸ்.பி.ஐ. முன்னாள் தலைவர் ஓ.பி.பாட், ஓய்வுபெற்ற நீதிபதி ஜே.பி. தேவதர், வங்கியாளர் கே.வி. காமத், இன்போசிஸ் துணை நிறுவனர் நந்தன் நிலேகனி, வழக்கறிஞர் சோமசேகர் சுந்தரேசன் ஆகியோர் நிபுணர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.*

*இந்த குழுவை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.எம்.சாப்ரே கண்காணிப்பார் எனவும் அறிவிக்கப்பட்டது. முதலீட்டாளர்களை பாதுகாப்பது, அவர்களின் விழிப்புணர்வை வலுப்படுத்துவது, அதானி குழுமத்தால் ஏதாவது சட்டமீறல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளதா என்பதை கண்டறிவது ஆகியவை குறித்து 2 மாதங்களில் இக்குழு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.*

*இந்நிலையில், இக்குழு தனது விசாரணை அறிக்கையை சீலிடப்பட்ட உறையில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில், கடந்த ஏப்ரல் 2 மற்றும் 26ம் தேதிகளில் செபியிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும், அப்போது, அதானி குழும நிறுவனங்கள், 12 சந்தேகத்துக்குரிய பரிவர்த்தனைகளை நடத்தி உள்ளதை செபி கண்டுபிடித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த வழக்கு வரும் 12ம் தேதி உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.*

---

கர்நாடக சட்டசபை தேர்தல்:

## விறுவிறுப்பான வாக்குப் பதிவு!

### மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்!



பெங்களூரு, மே 11–

கர்நாடக சட்டசபைத் தேர்தலின் வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணிக்கு துவங்கியது. இதில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

பிற்பகல் 3 மணி நிலவரப்படி 50.03 சதவிகித வாக்குகள் பதிவாகியிருந்தன.

கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று (10.5.2023) காலை 7 மணிக்கு தொடங்கியது.

வாக்குப்பதிவு தொடங்கியது முதலே வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

முதல்வர் பசவராஜ் பொம்மை, எதிர்க்கட்சி தலைவர் டி.கே சிவக்குமார் உள்பட அரசியல் தலைவர்கள் முதல் கர்நாடக மாநில பிரபலங்கள் வரை பலரும் வாக்களித்தனர். நேற்று காலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். நேற்று பிற்பகல் 3 மணி நிலவரப்படி 50.03 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

இத்தேர்தலில் காங்கிரஸ் தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று பல்வேறு கருத்துக் கணிப்புகளும் வெளிவந்த நிலையில் இத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

---

வ.உ.சிதம்பரனார் - மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உள்ளிட்ட தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு சாட்சிகளாக விளங்கும்

# தியாகிகள் - மேதைகளைப் பெருமைப்படுத்த சிலைகள் - நினைவுச் சின்னம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 11–

வ.உ.சிதம்பரனார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் ஆகியோருக்கு ரூ.66 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து, உத்தமத் தியாகி ஈரோடு ஈஸ்வரன் மற்றும் முன்னாள் முதலமைச்சர் டாக்டர்.ப.சுப்பராயன் ஆகியோருக்கு ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கும், மயிலாடுதுறையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கும், புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கும், 66 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், ஈரோடு மாவட்டத்தில் உத்தமத் தியாகி ஈரோடு ஈஸ்வரன் அவர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர்.ப.சுப்பராயன் அவர்களுக்கும் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## வங்கக்கடலில் தீவிரப் புயல்!

*சென்னை, மே 11 -*

*தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதை யொட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை குறைந்த காற்றழுத்தம் உருவானது.*

*அது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது. நீண்ட நேரமாக அந்த காற்றழுத்தம் அதே பகுதியிலேயே நிலை கொண்டு இருந்தது. பிறகு அது மெல்ல வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர தொடங்கியது.*

*அந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று மதியம் முதல் வலுவடைய தொடங்குகிறது. அது தீவிரப் புயலாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த புயலுக்கு மோக்கா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.*